சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP: 64/2019

2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30ம் நாள் எதிர்மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. T.சண்முகபிரியா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராஜசேகரன் (RW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

30.08.2024

நான் தற்போது குளித்தலையில் குடியிருந்து வருகிறேன். வருவாய் உதவியாளராக பணிசெய்கிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனம் TN 47 AW 5484 மாருதி ஆல்டோ 800 வாகனமாகும். நான் விபத்து சமயத்தில் தூத்துக்குடியிருந்து மதுரை நோக்கி சென்றேன். விபத்து நடந்த சாலை நான்குவழிசாலை ஆகும். நான் விபத்து சமயத்தில் மேற்படி சாலையில் ஓட்டி செல்லுமபோது எதிரே சைக்கிளில் வந்த நபர் சாலையில் குறுக்கே வந்ததால் நான் வாகனத்தை இடதுபுறமாக திரும்பும்போது என் வாகனத்தின் முன்னால் நின்று கொண்டிருந்த இண்டிகா காரின் மீது மோதிவிட்டேன். எந்தவிதமான சிக்கனல் இல்லாமல் இண்டிகா கார் ரோட்டில் நின்று கொண்டிருந்தது. என் மீது போட்ட குற்ற வழக்கில் நான் விடுதலையாகிவிட்டேன்.

**குறுக்கு விசாரணை :** ( 4 வது எதிர்மனுதாரர் தரப்பில்)

விபத்து என்னுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக முதல்தகவல்அறிக்கை மற்றும் குற்ற இறுதிஅறிக்கை என்மீது தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் மீது எந்தவித தவறு இல்லை என்றால் சரியல்ல. அவர் பார்க்கிங் இல்லாத இடத்தில் காரை நிறுத்தியுள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை :</u>** ( மனுதாரர்கள் தரப்பில்)

நான் நான்குவழி சாலையில் அதிகவேகமாக வந்ததால் தான் கட்டுபாடு இல்லாமல் எதிரே நின்ற வாகனத்தின் மீது மோதி சைக்கிளில் வந்த நபரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் அதிக வேகமாக வந்ததாலும் எதிரே இடதுபக்கம் நின்ற வாகனம் பார்க்கிங் இல்லாத இடத்தில் நின்றதாலும் இருவரும் விபத்திற்கு பொறுப்பு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.